சார்பு நீதிமன்றம், குளித்தலை

O.S.No.**153 / 2016**

வாதி / பிரதிவாதி **பி.வா.சா.8**வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி. T.திலகவதி அவர்களால் 44/1969 பிரிவின்படி **10.03.2025**ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | சரவணன் | கிராமம் : | |
| த/பெ : | சிதம்பரம் | வட்டம் : | |
| மதம் : | | தொழில்: | |
| ஜாதி : | | வயது : | |

முதல் விசாரணை

நான் திருச்சி குடியிருந்து நகை கடையில் வேலை செய்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். எனக்கு திருச்சியை சேர்ந்த பாப்பம்மாளை தெரியும். அவர் அரிசி வியாபாரம் செய்துவந்தார். அவர் செட்டில் மெண்ட் ஆவணம் எழுதி வைத்திருந்தார். அவர் எழுதி வைத்த செட்டில் மெண்ட் ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்திருந்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ-31-ல் செட்டில் மெண்ட் ஆவணத்தில் உள்ள இரண்டாவது சாட்சியாக உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் கையெழுத்து செய்த பி.வா.சா.ஆ.31ல் நல்லேந்திரன் என்பவரும் கையெழுத்து செய்தார்.

வாதி தரப்பு குறுக்குவிசாரணை

நான் பாப்பம்மாளுக்கு உறவினர். எனக்கு பாட்டி உறவு. எனது வீட்டிற்கும் பாப்பம்மாளின் வீட்டிற்கும் சமார் 200மீட்டர் இருக்கும். பாப்பம்மாளின் சொந்த ஊர் பொருந்தலூர் கிராமம், தெலுங்கப்பட்டி. தெலுங்கப்பட்டியில் பாப்பம்மாளின் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. எனக்கும் பூர்வீகம் தெலுங்கப்பட்டி தான். பி.வா.சா.ஆ.31 செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்டுள்ள சொத்து பாப்பம்மாளுக்கு எவ்வாறு கிடைத்தது என்று என்னிடம் சொல்லவில்லை. செட்டில்மெண்ட் எந்த மாதம் தேதியில் ஏற்பட்டது என்றால் 30.09.2013ல் ஏற்படுத்தப்பட்டது. மேற்படி பி.வா.சா.ஆ.31 ஐ எழுதிய ஆவண எழுத்தர் பெயர் தெரியுமா என்றால் தெரியாது- செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்டுள்ள சொத்திற்கு எவ்வளவு மதிப்பு போட்டுள்ளார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி செட்டில்மெண்ட் பத்திரத்தில் கோபால், வடிவேல் ஆகியோர்கள் கையெழுத்து செய்துள்ளார்களா என்றால் கையெழுத்து செய்யவில்லை. மேற்படி செட்டில்மெண்ட் பத்திரம் யாருடைய பெயரில் வாங்கப்பட்டது என்றால் பாப்பம்மாளின் பெயரில் வாங்கப்பட்டது. மேற்படி பி.வா.ச.ஆ.31ல் எந்த சொத்து வடிவேலுக்கு, எந்த சொத்து கோபாலுக்கு என்று காண்பிக்கப்பட்டுள்ளது

தெரியுமா என்றால் ஒரு சொத்து தான் காண்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி கோபால் மற்றும் வடிவேலுக்கு ஒரே சொத்தை மட்டும் தான் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது. சொத்தின் சர்வே எண் தெரியாது. மேற்படி சொத்தின் வார்டு எண், பிளாக் எண் தெரியுமா என்றால் தெரியாது. பாப்பம்மாள் அழைத்தன் பேரில் நான் சாட்சி கையொப்பம் செய்தேனா என்றால் பாப்பம்மாள் என் அம்மாவை அழைத்தார் என் அம்மாவிற்காக நான் சென்றேன். பாப்பம்மாள் தனக்கு உரிமையில்லாத சொத்தை பொறுத்து பொய்யாக ஏற்படுத்திய ஆவணத்திற்கு அனுசரணையாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஐந்தாவது பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/- (ஈ.முத்துசாமி)
சார்பு நீதிபதி
குளித்தலை.